# கூடுதல் சார்பு நீதிமன்றம், பழனி
## S.C.No.22/2013

2025ஆம் வருடம் அக்டோபர் மாதம் 09ஆம் நாள் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1873 ஆம் வருடத்தின் 10–வது விதிமுறைகளின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : திரு .முத்துக்கிருஷ்ணன் (அ.சா.9) | தொழில் | : ஓய்வு பெற்ற கிராம நிர்வாக அலுவலர் |
| த/பெ.<br>க/பெ. | : திரு. தங்கவேல்<br>: திரு. | வயது | : 71 |
| கிராமம் | : ஒட்டன்சத்திரம் | இனம் | : ஆண் |
| தாலுகா | : ஒட்டன்சத்திரம் | நாள் | : 09.10.2025 |
| மாவட்டம் | : திண்டுக்கல் | | |

எதிரிகள் முன்னிலையாகியுள்ளார்கள்.

<u>முதல் விசாரணை :– (சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

நான் மஞ்சநாயக்கன்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். என்னிடம் காட்டப்படும் மாரிமுத்து, நடராஜ் மற்றும் பாண்டி ஆகியோரின் ஒப்புதல் வாக்குமூலங்களில் முதலாவதாக இருக்கும் சாட்சிக் கையொப்பம் என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் மூன்று அத்தாட்சிகளில் உள்ள முதல் சாட்சிக் கையொப்பமும் என்னுடையதுதான். மாரிமுத்து, நடராஜ் மற்றும் பாண்டி ஆகியோரை பார்த்தால் என்னால் அடையாளம் கூற இயலும். நான் மஞ்சநாயக்கன்பட்டி கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்த சமயம் 07.03.2010 அன்று அதிகாலை 3.00 மணியளவில் ஆயக்குடி காவல் நிலைய காவலர்கள் என்னை அழைத்தனர். என் முன்பாக மாரிமுத்து, நடராஜன், பாண்டி ஆகியோரை விசாரித்தனர். பணத்தை திருடியதை அவர்கள் ஒப்புக்கொண்டனர். பணம் எங்கே இருக்கிறது என போலீசார் விசாரித்தனர். கோவிலுக்கு பின்பக்கமாக பணத்தை வைத்திருப்பதாக மூவரும் சொன்னார்கள். காலை 07.00 மணி சுமாருக்கு மஞ்சநாயக்கன்பட்டியில் பழனி சாலையில் இருக்கும் கோவிலுக்கு

அழைத்துச்சென்று முள்புதரில் வைத்திருந்த பணம் ரூ.1,10,000/—த்தை மாரிமுத்து எடுத்துக்கொடுத்தார். நடராஜ் என்பவர் ரூ.80,000/—த்தை எடுத்துக்கொடுத்தார். பாண்டி என்பவர் ரூ.10,000/—ஐ எடுத்துக்கொடுத்தார். நானும் கிராம உதவியாளரும் அதற்கு சாட்சிகளாக கையொப்பமிட்டோம். எதிரி மாரிமுத்துவின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9. எதிரி நடராஜன் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.10. எதிரி பாண்டியின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.11. பணம் ரூ.80,000/— கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அ.சா.ஆ.12. பணம் ரூ.1,10,000/— கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அ.சா.ஆ.13. பணம் ரூ.10,000/— கைப்பற்றப்பட்டதற்கான அத்தாட்சி அ.சா.ஆ.14. என்னை வழக்கு சம்பந்தமாக போலீசார் விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> :—

நான் 16 வருடங்கள் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்தேன். சம்பவ இடம் கணக்கன்பட்டி கிராம நிர்வாக அலுவலகத்தின் கீழ் வருமா என்றால் இல்லை, அது மஞ்சநாயக்கன்பட்டி கிராம எல்லைக்குள் வரும். சம்பவ இடம் ஆயக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்டதா, சத்திரப்பட்டி காவல் நிலைய எல்லைக்குட்பட்டதா என்றால் ஆயக்குடி காவல் நிலைய எல்லைக்குட்பட்டது. கிராம நிர்வாக அலுவலர்களுக்கு குற்ற விசாரணை முறைச்சட்டம் பற்றி பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கும் என்றால் சரிதான். கிராம நிர்வாக அலுவலர்களின் பணி சம்பந்தமாக 1999ம் ஆண்டு அரசாணை எண்.212/1999 வெளியிடப்பட்டது என்றால் சரிதான். அந்த அரசாணைப்படி எங்கள் ஒவ்வொரு நாள் பணியையும் அதற்குரிய பதிவேட்டில் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். மூன்று பதிவுகளாக அதனை எழுதவேண்டும் என்றால் சரிதான். காவல் துறைக்கு ஒரு பிரதியும், வட்டாட்சியருக்கு ஒரு பிரதியும் அனுப்ப வேண்டும் என்றால் சரிதான். மாரிமுத்து மற்றும் நடராஜ் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் பிரதியை நான் வட்டாட்சியருக்கு கொடுத்தேனா என்றால் ஞாபகமில்லை. மாதத்திற்கு இரு முறை வட்டாட்சியருக்கு எங்கள் பணி சம்பந்தமாக அறிக்கை அனுப்பவேண்டும்

என்றால் சரிதான். இந்த வழக்கு சம்பந்தமாக நான் அறிக்கை கொடுத்தேனா என்றால் இல்லை. பொதுவாக குற்றத்தை ஒப்புக்கொள்வதற்கும், தானாக முன்வந்து வாக்குமூலம் கொடுப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது என்றால் சரிதான். நான் காலை 3.00 மணிக்கு என்னை காவல் துறையினர் அழைத்ததால்தான் சென்றேன். என் முன்பாக எதிரிகள் மஞ்சநாயக்கன்பட்டி பேருந்து நிறுத்தத்தில் வைத்து கைது செய்யப்பட்டார்கள் என்றால் சரிதான். அப்போது எத்தனை மணி என்று எனக்கு ஞாபகமில்லை. போலீசார் எதிரிகளை சுமார் ஒரு மணி நேரம் விசாரித்தார்கள். சம்பவ இடத்திற்கும் விசாரிக்கப்பட்ட இடத்திற்கும் இடையே சுமார் 2 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். அங்கு வைத்துத்தான் எதிரிகளை விசாரித்தார்கள். எதிரிகளின் ஊர் எனக்கு தெரியாது. எதிரிகளைப் பற்றி வேறு விபரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிகள் சொல்லச்சொல்ல யார் எழுதினார்கள் என்றால் காவலர்கள்தான் எழுதினார்கள். என்ன விபரங்கள் எழுதினார்கள் என்று படித்துப்பார்த்தேன். தற்போது ஞாபகமில்லை. 3.00 மணியளவில் என்னை அழைத்தது சம்பந்தமாக என்னுடைய மேலதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். அது சம்பந்தமாக எழுதிய டைரியை காவல் துறையினருக்கு கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. வெளியில் அலுவல் பணிக்கு செல்லும்போது கிராம நிர்வாக அலுவலக தகவல் பலகையில் பதிவு செய்யவேண்டும் என்றால் சரிதான். அன்றைய தினம் பதிவு செய்தேனா என்றால் ஞாபகமில்லை. என்னுடைய சட்டைப் பையில் வைத்திருக்கும் வெள்ளைத்தாளில் இவ்வழக்குப் பற்றி விபரமாக குறிப்புகள் எடுத்துள்ளேன் என்றால் சரிதான். அந்த குறிப்பின்படி நான் சாட்சி சொல்வதாகச் சொன்னால் 15 வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு ஞாபகமில்லை என்பதால் குறிப்புகள் எடுத்தேன். பொதுவாக ஒப்புதல் வாக்குமூலம் வாங்கும்போது அங்கு அக்கம் பக்கம் உள்ள நபர்களை சாட்சிகளாக வைத்துக்கொள்ளவேண்டும் என்றால் சரிதான். பொதுவாக காவல் துறையினர் பதிவு செய்யும் ஒப்புதல் வாக்குமூலங்களை கிராம நிர்வாக அலுவலரான நாங்கள் பதிவு செய்யக்கூடாது

என்றால் சரிதான். நான் சொல்லியுள்ள சங்கதிகள் பொய்யானது என்றும், நான் அரசு ஊழியர் என்பதாலும், காவல் துறையினருக்கும் எனக்கும் உள்ள நட்பின் காரணமாகவும் காவல்துறையினர் தயாரித்த ஆவணங்களில் கையொப்பம் செய்துவிட்டு, பொய்யாகச் சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. கிராம நிர்வாக முத்திரையை நான் கையொப்பமிட்டபோது வைக்கவில்லை என்றால் சரிதான். காவல்துறையினர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் சட்டத்தை மீறி கையொப்பங்கள் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. வாக்குமூலம் வாங்கும்போது உள்ளூர் வாசிகளுக்கு தகவல் கொடுக்கவேண்டும் என்றால், அப்போது பேருந்து நிறுத்தத்தில் யாரும் இல்லை. உள்ளூர்வாசிகளுக்கு தகவல் கொடுத்துத்தான் ஒப்புதல் வாக்குமூலம் பெறவேண்டும் என்றால் சரிதான். எப்போது கொடுக்கப்பட்ட புகாருக்காக எதிரிகள் கைது செய்யப்பட்டார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் ஒரு வாரம் முன்பாக கொடுக்கப்பட்ட புகாருக்காக கைது செய்யப்பட்டார்கள். ஒவ்வொருவரும் 2,3 பக்கங்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். நான் பொய்யாக சாட்சியமளிப்பதாகச் சொன்னால் சரியல்ல. சம்பவ இடம் எது என்று எனக்கு சரியாகத் தெரியாது என்றால் சரியல்ல, அது ஓம்சக்தி கோவில். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றும், நான் பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல.

K BHARATHI Digitally signed by K BHARATHI Date: 2025.10.09 19:44:52 +0530

கூடுதல் சார்பு நீதிபதி,
பழனி.